*14*

# பாதுகாப்பாக வாழுதல்

## (6:19-34)

*6:19-34ல் இயேசு, தேவன்மீது நம்பிக்கை வைத்தலுக்குப் பதிலாகச் செல்வத்தைக் குவித்து வைத்தலுக்கு எதிராக எச்சரிக்கை செய்தார். பூமிக்குரிய செல்வங்கள் மீது மனதை முழுமையாகச் செலுத்துதல் என்பது பிரிவினையான பற்றுறுதியைக் காட்டுகிறது மற்றும் இது தேவன் அளிப்பார் என்பதன் மீதான விசுவாசத்தில் குறைவுபடுதலையும் காண்பிக்கிறது.*

## தேவனுக்கு அர்ப்பணிப்பு (6:19-24)

*மாய்மாலத்தின் அபாயம் குறித்த தமது எச்சரிப்பில் இருந்து கடந்துசென்ற இயேசு, தேவனுக்கு உண்மையான அர்ப்பணித்தலின் உயர்ந்த மட்டத்தை அணுகினார். ஒரே சிந்தனையான பற்றுறுதியின் ஆய்வுக் கருத்தானது, செல்வம் பற்றிய ஏற்புடைய கண்ணோக்குடன் பிணையப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை எடுத்துரைக்க மூன்று சிறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவைகள், அடிப்படையில் முற்றிலும் மாறுபட்ட, இருவகையான "செல்வங்கள்" (6:19-21), "கண்கள்" (6:22, 23) மற்றும் "எஜமானர்கள்" (6:24) ஆகியவை பற்றிக் கருதி உரைக்கின்றன. பலமான இந்த நேரெதிர்க் கருத்துக்களைப் பயன்படுத்தியதன் மூலம் இயேசு, தமது உரையைக் கேட்பவர்கள், உண்மையான சீஷத்துவத்திற்கு அறைகூவல் விடுக்கும் வாழ்வின் பிரச்சனைகளை எதிர்த்து நிற்கும்படி வற்புறுத்தினார்.*

### *இருவகையான செல்வங்கள் (6:19-21)*

***[19]"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; [20]இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; [21]அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."***

***வசனம் 19.*** *இயேசுவின் முதல் எச்சரிக்கையான* ***பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்*** *என்பது, மூலமொழியில் வார்த்தைகளின் மீதான விளையாட்டு ஒன்றைக் கொண்டுள்ளது. Thēsaurizō என்ற கிரேக்க வினைச்சொல்லில் இருந்து வந்த "சேர்த்துவைக்க" என்ற வார்த்தை, thēsauros என்ற பெயர்ச்சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. இவ்வசனத்தின் தொடக்க*

வார்த்தை, ஆங்கிலத்தில் "Do not store up for yourselves treasures," என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க முடியும்.

**பூமியிலே** என்ற சொற்றொடர், இந்த "செல்வங்களின்" தற்காலிக மற்றும் உலகப்பிரகாரமான இயல்பைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஒருநபர் தாம் சேமித்து வைத்துள்ள உலகப்பிரகாரமான பொருள்களைத் தவிர வேறு எதையும் காண்பிக்க இயலாது என்றால், அவர் ஏழையாகவே உள்ளார். ஒருவர் தமது சொந்த சுயநலப் பயன்பாட்டிற்காகப் பொருள்செல்வங்களைச் சேர்த்துக் குவிப்பதற்கு அல்லது நிலையற்ற செல்வங்களின் மீது தமது நம்பிக்கையை வைப்பதற்கு, முதல் முன்னுரிமை ஏற்படுத்துவதில் பாவம் உள்ளது *(1 தீமோத்தேயு 6:17-19; காண்க மாற்கு 10:17-24; லூக்கா 12:15; 18:24).*

பூமிக்குரிய செல்வங்களை **பூச்சியும் துருவும் அழிக்கக்** கூடும் என்பதால் ஒருவர், அவற்றைச் சேர்த்து வைப்பதில் அக்கறை செலுத்தக்கூடாது. இயேசுவின் நாட்களில் ஒரு நபருடைய செல்வம் என்பது, உடை போன்ற உடமைகளை அவர் சேர்த்து வைத்திருந்ததைக் கொண்டு கணக்கிடப் பட்டது. விலையுயர்ந்த இந்த உடைகளை "பூச்சி"யால் சுலபமாக அழிக்க முடியும். "துரு" என்ற வார்த்தை, "தின்பவன்" என்று நேரடியாக அர்த்தப்படும் *brōsis* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. "துரு" என்பது விலையுயர்ந்த உலோகங்களை உண்டுவிடுகிறது (யாக்கோபு 5:2, 3).

பூமிக்குரிய செல்வத்தைக் **கள்வர்கள் கன்னமிட்டுத் திருட முடியும்** என்பதையும் இயேசு கூடுதலாகக் கூறினார். "கன்னமிட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட *diorussō* என்ற வார்த்தை, "தோண்டி எடுத்தல்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. களிமண்ணால் ஆன செங்கற்களினால் கட்டப்பட்ட சுவர்களில் திருடர்கள் கன்னம் தோண்டுவதுண்டு (யோபு 24:16). பூமிக்குரிய உடமைகள் யாவும் தற்காலிகமானவை, மாறக்கூடியவை மற்றும் கடந்து செல்பவை என்று இயேசு வலியுறுத்தினார். இயேசுவின் சீஷர்கள், அழியக்கூடிய மற்றும் மறையக்கூடிய உடமைகள் மீது தங்கள் நம்பிக்கையைக் கட்டி எழுப்புதலின் மதியீனத்தை அவர்களுக்கு இயேசு நினைவூட்டினார்.

**வசனம் 20.** இந்தக் காரணங்களினால், **பரலோகத்திலே ... பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்தல்** நல்லறிவுடையதாக உள்ளது. "பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல்" என்பது, இந்த உலகத்துப் பொருள்களைக் காட்டிலும் அதிகமாக, தேவனையும், அவருடைய குமாரனையும், மற்றும் ஆவிக்குரிய விஷயங்களையும் அன்புகூருதல் என்று அர்த்தப்படுகிறது (லூக்கா 14:26-33; காண்க கொலோசெயர் 3:1, 2). ஒருவர் தமது உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை, தேவனை மகிமைப்படுத்தவும் அவரது இராஜ்யத்தை உயர்த்தவும் பயன்படுத்தத் தேர்ந்துகொண்டுள்ளார் என்று இது அர்த்தப்படுகிறது. அவர் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் போதிக்கவும் தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யவும் முடிவு செய்துள்ளார். தமது உடமைகளை உரிமையாகக் கொண்டிருந்த செல்வந்தரான இளம் அதிகாரிக்கு இயேசு, "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா" என்று கூறினார் (19:21). "பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல்" என்பதைப் பவுல், "நற்கிரியைகளில்

*ஐசுவரியவான்களாகவும்” மற்றும் “உதாரணமுள்ளவர்களுமாயிருக்கவும்” என்று விளக்கப்படுத்தினார் (1 தீமோத்தேயு 6:18, 19).*

பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் என்ற கருத்து யூதத்துவத்தில் தனது வேர்களைக் கொண்டுள்ளது.[1] தள்ளுபடி ஆகமங்களில் உள்ள ஒரு புத்தகமான சீராக் ஆகமம், பின்வருமாறு கூறுகிறது,

> பணத்தை உன் சகோதரர்களுக்காகவோ நண்பர்களுக்காகவோ செலவிடு; அவர்கள் தேவையிலிருக்கும் போது வெறும் கையோடே அனுப்பிவிடாதே. உன் சகோதரன் அல்லது நண்பனுக்காக உன் வெள்ளியை இழந்து போ; மற்றும் அது துருப்பிடித்து அழிந்து போகும்படி அதைக் கல்லுக்கு அடியில் மறைத்து வைக்காதே. உன்னத இறைவனின் கட்டளைப்படி உன் செல்வத்தைப் பயன்படுத்து; அது பொன்னிலும் மேலாக உனக்குப் பயனளிக்கும்.[2]

தல்மூத், “கை எட்டக்கூடிய இடத்தில் எனது தந்தை பொருள் சேர்த்து வைத்தார், ஆனால் கை எட்ட இயலாத இடத்தில் நான் பொருள்சேர்த்து வைத்தேன் ... எனது தந்தை இந்த உலகத்திற்காகப் பொருள் சேர்த்து வைத்தார், ஆனால் நானோ எதிர்கால உலகத்திற்காகப் பொருள்சேர்த்திருக்கிறேன்” என்று கூறுகிறது.[3]

**வசனம் 21.** நமது பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தலின் நித்திய நோக்கத்தை வலியுறுத்தாமல், இயேசு இந்த ஆய்வுக்கருத்து பற்றிய தமது கலந்துரையாடலை முடிக்கவில்லை: **உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.** “இருதயம்” (*kardia*) என்பது ஒருவரது இருத்தலின் மையத்தை அடிக்கடி குறிப்பிடுகிறது. இங்கு, இதன் பொதுவான பயன்பாட்டை மனதில் கொண்டு, இது ஒரு நபரின் “பிரியங்கள்,” “முன்னுரிமைகள்” மற்றும் “விருப்பங்கள்” ஆவியவற்றைக் குறிக்கிறது. பூமியில் ஒருவர் தமக்கென்று “பொக்கிஷத்தை” சேர்த்து வைத்தால், அங்குதான் அவரது இருதயமும் இருக்கும். அவர் அண்மைப்பார்வை உடையவராக, உலக சிந்தை கொண்டவராக மற்றும் ஆவியற்றவராக இருக்கிறார். அவர் தேவனுடன் இருக்க பரலோக இல்லம் ஒன்றை எதிர்பார்க்கக் கூடாது. இதற்கு நேர்மாறாக, ஒருவர் பரலோகத்தில் “பொக்கிஷத்தை” சேர்த்து வைத்தால், அங்கே அவரது இருதயமும் இருக்கும். அவர் கிறிஸ்துவையும் அவரது இராஜ்யத்தையும் முதலிடத்தில் வைக்கிறார், மற்றும் அவர் தமது செல்வங்களைக் கொண்டு பிறருக்கு ஊழியம் செய்கிறார். அவர் இங்கு பரிபூரண வாழ்வையும் பரலோகத்தில் தேவனுடன் நித்திய வாழ்வையும் மகிழ்வுடன் அனுபவித்தலை எதிர்பார்க்க வேண்டும்.

### *இரு வகையான கண்கள் (6:22, 23)*

***22 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.***

***23 உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!***

*வசனம் 22.* இயேசு, தேவனுக்கு அர்ப்பணித்தல் என்ற தமது ஆய்வுக்கருத்தை, இரண்டாவது உவமை ஒன்றில் தொடர்ந்தார். அவரது உறுதிப்பாடு பின்வருமாறு: **கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது.** முதல் நூற்றாண்டு பலஸ்தீன நாட்டில் வெளிச்சத்திற்கு முதன்மை ஆதாரங்களாக எண்ணெய் விளக்குகளே பயன்படுத்தப்பட்டன (5:15ன் மீதான விளக்க உரையைக் காணவும்). மனித உடலுக்கு விளக்கு ஆதாரமூலமாகக் கண் செயல்படுகிறது; இது உடலுக்கு பயனளிப்பதும் அதன் இயக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதுமான வெளிச்சத்தை உணர்ந்தறிகிறது.

இயேசு இந்த ஒப்பீட்டை ஏற்படுத்திய நிலையில், பின்வரும் முடிவைக் கொடுத்தார்: **உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.** "தெளிவு" என்பதற்கான (*haplous*) கிரேக்க வார்த்தை "தனித்த [ஒரே]" என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது "ஒரே சிந்தை கொண்ட அர்ப்பணிப்பு" என்று மறைமுகமாக உணர்த்தலாம். "*நோக்கத்தின் தனித்தன்மை* என்பது ஆவிக்குரிய வளமையின் மாபெரும் இரகசியங்களில் ஒன்றாக உள்ளது" என்று J. C. ரைல் அவர்களுடன் சேர்ந்து நாம் கவனிக்க வேண்டும்.[4] இருப்பினும் இவ்வார்த்தை, "ஆரோக்கியமான" மற்றும் "நல்ல" என்றும் தரவழைக்கப் பட்டுள்ளது, இது, "பெருந்தன்மை" என்று மறைமுகமாக உணர்த்தலாம். பழங்காலங்களில், ஒரு "நல்ல கண்" என்பது பெருந்தன்மைக்கு மரபுச் சொற்றொடராக இருந்தது. நீதிமொழிகள் 22:9ம் வசனம், "கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான்" என்று கூறுகிறது. மேலும் இதனுடன் தொடர்புடைய *haplotēs* என்ற வார்த்தை, பெருந்தன்மையாக இருத்தல் பற்றிய சந்தர்ப்பப் பொருள்களில் காணப்படுகிறது (ரோமர் 12:8; 2 கொரிந்தியர் 8:2; 9:11, 13). "ஒருவேளை இவ்வசனத்தில் *haplous* என்ற வார்த்தை இரட்டை அர்த்தம் கொண்டதாக, அர்ப்பணித்தலில் தனித்தன்மையையும் பெருந்தன்மையையும் ஒன்றிணைப்பதாக இருக்கலாம்."[5]

*வசனம் 23.* "வெளிச்சம் நிறைந்த" பாக்கியமான நபர், **முழுவதும் இருளாயிருக்கும்** தேவபக்தியற்ற நபருடன் மிகவும் நேரெதிராக ஒப்பிடப்படுகிறார். இந்தத் தனிநபரின் **கண் கெட்டதாயிருக்கிறது** என்று இயேசு கூறினார். "கெட்டது" என்பதற்கான (*ponēros*) கிரேக்க வார்த்தை "துன்மார்க்கம்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். "கெட்ட கண்" "வன் கண்ணன்" என்ற சொல்விளக்கம், "கஞ்சத்தனமான," "பேராசையான" அல்லது "விரோதமான" தன்மைகொண்ட ஒருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டது (உபாகமம் 15:9; நீதிமொழிகள் 23:6; KJV). நீதிமொழிகள் 28:22ம் வசனம், "வன் கண்ணன் செல்வனாகிறதற்குப் பதறுகிறான்; வறுமை தனக்கு வருமென்று அறியாதிருக்கிறான்" என்று கூறுகிறது. இயேசுவின் உவமைகளில் ஒன்றில், தோட்டக்காரர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய [*ponēros*] எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா?" (20:15). ஒருவர் பேராசையினால் வெற்றிகொள்ளப்பட்டால், அவரது வாழ்வு பரிதாபகரமானதாக இருக்கும்.[6] இயேசு, **இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!** என்று வியப்படைந்தார்.

***இரண்டு வகையான எஜமானர்கள் (6:24)***

***[24]இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.***

***வசனம் 24.*** *"எஜமானர்" என்பதற்கான* (*kurios*) *கிரேக்க வார்த்தை, "ஆண்டவர்" என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது தலைமைத்துவம், உரிமைத்துவம், உயர்பதவி மற்றும் அதிகாரத்துவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது, அடிமைகளை உரிமையாகக் கொண்டுள்ள ஒருவரைக் குறிக்கிறது. முதல் நூற்றாண்டில், அடிமையின் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும், எஜமானர் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். அடிமை ஏதொன்றையும் எவர் ஒருவருக்கும் அளிக்க இயலாதவராக இருந்தார், ஏனெனில் அவர் முற்றிலும் தனது எஜமானருக்கு உரியவராக இருந்தார்.*

***இரண்டு எஜமானர்கள்*** *இணைந்து ஒரு அடிமையை உரிமையாகக் கொண்டிருத்தல் என்பது கேள்விப்படாததாக இருக்கவில்லை (ஆதியாகமம் 37:28; நடபடிகள் 16:16, 19).[7] இருப்பினும் அவ்விரண்டு எஜமானர்களும் நேரெதிரான ஆர்வங்களைக் கொண்டிருந்தனர் என்றால், அடிமையாயிருப்பவர் இருவருக்கும் முழுமையான அர்ப்பணித்தலுடன் இருத்தல் என்பது இயலாத விஷயமாக இருக்கும். ஒருவரைக் காட்டிலும் இன்னொருவர் அதிகம் விரும்பப்படுவார். இந்த சந்தர்ப்பப்பொருளில் பகைத்தல் என்பது "குறைவாக அன்புகூருதல்" என்று அர்த்தப்படுவதாக, ஜேக் லூயிஸ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார் (காண்க ஆதியாகமம் 29:31-33; உபாகமம் 21:15).[8]*

*இயேசு,* ***தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது*** *என்று சுருக்கமாக உரைத்தார்.* (NASB *வேதாகமத்தில் இது* "wealth" *என்றுள்ளது ஆனால்.)* KJV *வேதாகமத்தில், "உலகப்பொருள்" என்று அர்த்தப்படும்* "mammon" *என்ற வார்த்தை உள்ளது. இதுஅரமாயிக் மொழியில் உள்ள* *mamon* *என்ற வார்த்தையில் இருந்து கொண்டுவரப்பட்ட* *mamōnas* *என்ற கிரேக்க வார்த்தையின் நேரடி மொழிபெயர்ப்பு ஆகும். இது புதிய ஏற்பாட்டில் லூக்கா 16:9, 11, 13 ஆகிய வேறொரு இடத்தில் மாத்திரம் காணப்படுகிறது.* "Mammon" *அல்லது* "wealth" *என்பது இங்கு ஒரு எஜமானராக நபர்த்துவப் படுத்தப்படுகிறது. லூயிஸ் அவர்கள், "பல மனிதர்கள், தாங்கள் எதை உரிமைகொண்டுள்ளதாக நினைக்கிறார்களோ, அதினால் உரிமை கொள்ளப் பட்டிருக்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.[9]*

## *கவலையை ஜெயித்தல் (6:25-34)*

***[25]ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?***

***[26]ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?***

***[27]கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?***

***[28]உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;***

***[29]என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***[30]அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?***

***[31]ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.***

***[32]இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.***

***[33]முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.***

***[34]ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.***

*தேவனுக்கு தம்மை முழுமனதுடன் அர்ப்பணித்துள்ள ஒருவர், செல்வத்திற்கு அடிமையாக இருக்க மாட்டார். அவர் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கமாட்டார். அதற்குப்பதிலாக அவர், பெருந்தன்மையுடன் இருந்து, மற்றவர்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிய உதவி தேவையில் இருப்பவர்களுக்கு உதவுபவராக இருப்பார் (6:19-24). இந்த நபர், தம்மைப் பற்றித் தேவன் கவனித்துக் கொள்வார் என்று நம்பிக்கை வைத்து, தமது வாழ்வில் தேவனுடைய இராஜ்யத்திற்கு முதலிடம் கொடுப்பார் (6:25-34).*

*இயேசு கவலைப்படுவதற்கு எதிரான (6:25) புத்தி கூறுதலுடன் துவங்கினார் மற்றும் "பறவைகளைக்" கொண்டும் (6:26, 27) மற்றும் "புஷ்பங்களைக்" கொண்டும் (6:28-30) இயற்கையிலிருந்து கருத்துக்களை சித்தரித்தார். அவர், தம் சீஷர்களை கவலைப்படுவதை நிறுத்தும்படியும் இராஜ்யத்தைத் (6:31-34) தொடரும்படியும் அழைத்து, மறுபடியும் புத்தி கூறுவதை தொடர்ந்தார்.*

***வசனம் 25.*** *இயேசு "ஆகையால்" என்று கூறியதில், தாம் முன்பு கூறியவற்றைக் குறிப்பிட்டார். ஒருவர் தமது எஜமானர் என்ற வகையில்*

தேவனுக்கு ஊழியம் செய்தால், அவர் கவலைப்படுவதற்குக் காரணமில்லை; ஏனெனில் அவரது ஊழியத்திற்கு தேவையானது எதுவோ அதைத் தேவன் அளிப்பார். "கவலை" என்பதற்கான (*merimnaō*) கிரேக்க வார்த்தை, "கவலை கொண்டிருத்தல்" அல்லது "அளவுக்கு அதிகமாகக் கவலையாயிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. கவலையானது, ஒருவர் தமது எஜமானருக்கு ஊழியத்தில் செலவிட வேண்டிய ஆற்றலை வெளியேற்றி விடுகிறது. அது வீணானதாக உள்ளது; மற்றும் அதுபோன்றது தடைசெய்யப் பட்டுள்ளது. பவுல், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:6; காண்க 1 பேதுரு 5:7).

புதிய ஏற்பாட்டில், **ஜீவன்** என்பதற்கான (*psuchē*) கிரேக்க வார்த்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வசனத்தில் "ஜீவன்" என்பது "உடலின் இயக்குவிக்கும் கொள்கை"[10] மற்றும் சரீரத்துடன் (*sōma*) இணைகருத்தின் வடிவங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது என்பது உறுதி. மனிதர்கள் **உடல்ரீதியாக** உயிர்வாழ்வதற்கு, **உணவு, பானம்** மற்றும் **உடை** ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மைக்கேல் J. வில்க்கின்ஸ் அவர்கள், "மக்களுக்கு அன்றாட வாழ்வுப் போராட்டத்தில் பழக்கமாக உள்ளவற்றைப் பற்றி இயேசு பேசினார். அவர்களின் அன்றாடப் பழக்கத்தில் பெரும்பான்மையானது, தினசரி உயிர்வாழப் போதுமானவற்றைப் பெறுவதற்கு முயற்சி செய்யச் செலவிடப்பட்டது" என்று சுட்டிக்காண்பித்தார்.[11] இருப்பினும் வாழ்வு என்பது இதைக் காட்டிலும் மாபெரும் அர்த்தத்தையும் வெறுமனே உடல் பாதுகாக்கப்படுதலைக் காட்டிலும் அதிகம் மாண்புமிக்க குறிக்கோள்களையும் கொண்டுள்ளது.

**வசனம் 26.** இயேசு தமது முதலாவது விவரிப்பில், **ஆகாயத்துப் பறவைகளுக்குத்** தேவன் உணவு அளிக்கிறார் என்ற உறுதிப்பாட்டைக் கொடுத்தார். மனிதர்களைப் போலின்றி, **அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை.** இந்தக் கூற்றில் இருந்து ஒருவர், பறவைகள் தங்கள் உணவிற்காக ஒன்றும் செய்வதில்லை என்று முடிவுசெய்துவிடக் கூடாது. அவைகள் அதிகாலையில் தங்கள் காலை உணவிற்காக மண்புழுக்களைச் சேகரிப்பவைகளாகக் காணப்பட முடியும். இருப்பினும் இந்தப் படைப்புயிர்கள் தாங்கள் உண்பவற்றை உற்பத்தி செய்ய எதுவும் செய்வதில்லை; அது தேவனால் அருளப்படுகிறது. அவற்றிற்குத் தேவன் ஏற்கனவே அருளியவற்றைப் பெறுவதற்கு அவைகள், முயற்சி மாத்திரம் மேற்கொள்கின்றன. இந்த விவரிப்பில் இயேசு, சிறியவற்றில் இருந்து பெரியவற்றிற்கு என்ற விவாதத்தைப் பயன்படுத்தினார். அற்பமான பறவைகள் மீது தேவன் அக்கறை எடுத்துக்கொள்கிறார் என்றால், தமது சாயலில் படைக்கப்பட்ட மக்களுக்கு (ஆதியாகமம் 1:27) அவர் உணவளிப்பது நிச்சயம். சொல்லப்போனால் பறவைகளைக் காட்டிலும் **மனிதர்கள் விசேஷித்தவர்களாக** உள்ளனர் (காண்க சங்கீதம் 8:3-8).

**வசனம் 27.** கவலைப்படுதலைப் பற்றி முழுமையாகச் செயல்விளக்கப் படுத்துவதற்கு இயேசு, **"கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் வாழ்வில் ஒரு மணிநேரத்தையாவது கூட்டிக்கொள்வான்?"** என்று

கேட்டார். சொல்லாடல் கலையான இந்தக் கேள்விக்கு, "எவரும் இல்லை" என்பதே பதிலாக உள்ளது.

"கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் வாழ்வில் ஒரு மணிநேரத்தையாவது கூட்டிக்கொள்வான்?" என்பதற்குப் பதிலாக, KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில் "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" என்றுள்ளது. "முழம்" என்பதற்கான (*pēchus*) கிரேக்க வார்த்தை, தோற்றகாலத்தில் "முழங்கை" என்று அர்த்தப்பட்டது, மற்றும் பின்பாடு இது அளக்கும் அலகு (சுமார் பதினெட்டு அங்குலங்கள் கொண்டது) ஒன்றைக் குறிப்பிடலாயிற்று. இருப்பினும், காலத்தின் பகுதியைக் குறிப்பிட விசேஷ அளவீடுகள் சிலவேளைகளில் பயன்படுத்தப்பட்டன (சங்கீதம் 39:5). "சரீர அளவு" (*hēlikia*) என்ற வார்த்தை ஒருவரின் "வயதையும்" குறிப்பிட முடியும் (யோவான் 9:21; எபிரெயர் 11:11). இயேசு "மிகவும் அற்பமான காரியத்தை" (லூக்கா 12:25, 26) குறிப்பிட்டதால், வேதாகமத்தின் பெரும்பான்மையான நவீன பதிப்புகள், இந்த வார்த்தையை ஒருவரின் வாழ்நாள் காலத்துடன் ஒரு சுருக்கமான கால அளவைக் கூட்டுதல் என்ற சொற்றொடர்களில் இவ்வார்த்தைகளை மொழிபெயர்க்கின்றன. ஒருவரின் சரீர அளவுடன் ஒருமுழத்தைக் கூட்டுதல் என்ற மாற்றுக்கருத்தைப் பகுத்தறிவுடன் பயன்படுத்துதல் என்பது வியப்புக்குரிய அருஞ்செயலாக இருக்கும்! ஆகையால் NASB வேதாகமத்தின் சொற்றொடராக்கமே சரியாக இருப்பதாகக் காணப்படுகிறது.

**வசனங்கள் 28, 29.** இயேசு தமது இரண்டாவது விவரிப்பில், **உடைகள்** மீது கவனம் குவித்தார். **காட்டுப்புஷ்பங்கள்** என்பதைப் பயன்படுத்தி, மீண்டும் ஒருமுறை அவர், இயற்கையின் மீது கவனம் செலுத்த அழைத்தார். ஒரு மலர் தனது அழகுநிலைக்குச் செய்வது என்ன? அது **உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை,** இருப்பினும் வண்ணங்கள் நிறைந்த ஓவியத்திரைபோன்ற தோற்றத்தை அவை கொண்டுள்ளன, அவற்றில் இருந்து கவரப்பட்ட நிறங்கள், அழகுமிக்க ஆடைகளை உருவாக்கப் பயன்படுகின்றன. மலர்களின் வகைகள், வண்ணங்கள், உருவங்கள் மற்றும் மணம் ஆகியவை பிரமிக்கச் செய்வதாக உள்ளன.

மலர்களைப் பொறுத்தமட்டில் இயேசு, **சாலொமோன் தமது மகிமையில் எல்லாம் - அவர் உடுத்திக்கொண்ட நேர்த்தியான உடைகள்** எதுவும் - இவற்றில் ஒன்றுடனாவது ஒப்பிடப்பட இயலாது என்று கூறினார். சாலொமோன் அரசர் தமது மாபெரும் ஞானத்திற்காக மாத்திரமல்ல, ஆனால் தமது மாபெரும் செல்வத்திற்காகவும்கூடப் பழமொழியாகக் குறிப்பிடப்பட்டவராக இருந்தார் (1 இராஜாக்கள் 3:12, 13; 10:1-29; 2 நாளாகமம் 9:1-28); இருப்பினும், தேவன் தமது அழகைக் கொண்டு உடுத்தியிருந்த மலர்களுடன் ஒப்பிடுகையில், அவரது (சாலொமோனின்) மிகநேர்த்தியான இராஜரீக உடைகளும்கூட மங்கின நிறமாக இருந்தன. இயேசு ஒரு குறிப்பிட்ட மலரைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை எனலாம். இருப்பினும், இரத்தச் சிவப்பான அனிமோன் (நிறத்தில் செம்பருத்திப் பூவைப் போன்றது) என்ற மலர், சாலொமோனின் உடைகளுடன் ஒப்பிடப்படலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது (காண்க நியாயாதிபதிகள் 8:26). வில்க்கின்ஸ் அவர்கள், "இன்றைய நாட்களிலும்கூட, கலிலேயாக் கடலின் மேல்பகுதியில் உள்ள மலைச்சாரலில் உள்ள வனத்தில்,

சிவப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிறமான அனிமோன் மலர்கள் (anemone coronaria) பத்து அங்குல நீளத் தண்டுகளின் உச்சியில் தங்கள் நீலநிற மையப்பகுதியுடன் வளருகின்றன" என்று குறிப்பிட்டார்.[12]

**வசனம் 30.** தேவன் **வயல்வெளியில் உள்ள புற்செடிகளுக்கு** அழகிய மலர்களை உடையாக அளிக்கிறார். இருப்பினும் இந்தப் புற்செடிகள் தற்காலிகமானவையாகவே உள்ளன: "சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்" (யாக்கோபு 1:11; காண்க 1 பேதுரு 1:24). அது **இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும்.** ஏழைமக்கள் இந்தக் காய்ந்த மலர்களை எடுத்து அவற்றை நெருப்புக்கு எரிபொருளாகப் பயன்படுத்துவார்கள். மீண்டுமாக இயேசுவின் விவாதம், சிறியதில் இருந்து பெரியதற்குச் செல்வதாக உள்ளது. அற்பமான தாவரத்திற்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவிப்பார் என்றால், நிச்சயமாகவே அவர் தமது மக்களுக்கு உடுத்துவிப்பார்.

**அற்ப விசுவாசிகளே** என்ற சொல்விளக்கம் மத்தேயு சுவிசேஷத்தில் பலமுறைகள் (8:26; 14:31; 16:8; 17:20) காணப்படுகிறது. தல்மூத், "தமது உணவுக்கூடைக்குள் ஒரு துண்டு அப்பத்தை வைத்துக் கொண்டு, 'நாளைக்கு நான் எதை உண்பேன்?' என்று கூறுகிற எவரும், அற்பவிசுவாசம் கொண்டுள்ளவராக மாத்திரமே இருக்கிறார்" என்று கூறுகிறது.[13]

**வசனங்கள் 31, 32.** இந்த இடத்தில் இயேசு, ஒருவர் எதை **உண்பது, குடிப்பது** அல்லது **உடுத்துவது** என்பது பற்றிக் **கவலைப்படக்கூடாது** என்ற தமது தோற்றகால புத்திமதியைத் திரும்ப கூறினார் (காண்க 6:25). நமக்குக் குறிப்பிட்ட சில தேவைகள் வேண்டும் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார், மற்றும் நமது பகுதிப்பணியை நாம் செய்யும்போது, அவற்றை அவர் நமக்கு அருளுவார். கவலைப்படுதல் என்பது நமக்கு உணவையோ, உடையையோ அல்லது உறையுளையோ அளிக்காது, அல்லது அது எவரொருவரின் வாழ்நாள்காலத்திலும் ஒரு நிமிடத்தையாவது கூட்டாது. நமக்கு உணவும், உடையும் நமது தலைகளைச் சாய்க்க ஒரு இடமும் இருந்தால், அதைவிட அதிகமாக நமக்குத் தேவைப்படுவது என்ன? கவலைப்படுதல் எந்த பயனையும் கொண்டுவருவதில்லை. பவுல், "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும்கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:6-8).

**இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்** என்று இயேசு கூறினார். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், உணவு, பானம் மற்றும் உடை ஆகியவற்றின் பின்னால் ஓடுதல் என்பது ஒருவரை, தேவனை அறியாத புறதெய்வ வணக்கத்தாரைப் போலாக்குகிறது (காண்க எபேசியர் 2:11, 12). Robert H. Mounce அவர்கள், "கவலைப்படுதல் என்பது நடைமுறை நாத்திகமாகவும் தேவனை அவமதித்தலாகவும் உள்ளது" என்று கூறினார்.[14] அஞ்ஞானிகளுடன் ஒப்பிடுதல் என்பது, இயேசுவின் உரையைக் கேட்டவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி, அவரது வார்த்தைகளைக் கவனமாகக் கருதும்படி அவர்களை வற்புறுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இது

மலைப்பிரசங்கத்தில் "அஞ்ஞானிகள்" பற்றிய மூன்றாவது குறிப்பாக உள்ளது (5:47; 6:7 ஆகியவற்றின் விளக்கங்களைக் காணவும்).

**வசனம் 33.** வாழ்வின் உலகப்பிரகாரமான அத்தியாவசியத் தேவைகளை தேடுவதற்குப் பதிலாக, **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்** என்று, இயேசு தமது சீஷர்களுக்கு அறிவுறுத்தினார். "இராஜ்யம்" (*basileia*) மற்றும் "நீதி" (*dikaiosunē*) ஆகிய வார்த்தைகள் மலைப்பிரசங்கம் முழுவதிலும் அடிக்கடி காணப்படுகின்றன (5:3, 6, 10, 19, 20; 6:1, 10, 13, 33; 7:21).

"அவருடைய இராஜ்யம்" என்பது, கிறிஸ்துவின் சபை நிலைநாட்டப்பட்டபோது, உருவம் எடுத்த, தேவனுடைய ஆளுகை அல்லது ஆட்சியைக் குறிக்கிறது (6:10ன் மீதான விளக்கத்தைக் காணவும்). மத்தேயு சுவிசேஷத்தின் பிற்பகுதியில், "இராஜ்யம்" (*basileia*) மற்றும் "சபை" (*ekklēsia*) ஆகிய சொற்றொடர்கள் ஏறக்குறைய ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன (16:18, 19). "அவருடைய நீதி" என்பது, அவருடைய கட்டளைகளை இருதயத்தில் இருந்து பின்பற்றுதல் என்பதைக் கேட்பதான, வாழ்விற்கான தேவனுடைய தர அளவையைக் குறிக்கிறது (5:6, 20ன் மீதான விளக்கங்களைக் காணவும்). கடந்த காலங்களில் தேவனுடைய நீதியான ஆணைகள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டன. இருப்பினும் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தவே கிறிஸ்து வந்தார். இந்த உடன்படிக்கையில் பங்கேற்பவர்கள், தேர்வுசெய்த கீழ்ப்படிதலை நடைமுறைப்படுத்தாமல், கிறிஸ்துவின் போதனைகள் யாவற்றையும் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொள்ள வேண்டும்.

மக்கள் தேவனை "தேட" வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (காண்க நடபடிகள் 17:26, 27; எபிரெயர் 11:6). "தேடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*zēteō*) கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் எண்ணற்ற முறைகள் காணப்படுகிறது. இங்கு இது, ஒருமுறை நடக்கும் நிகழ்வையல்ல ஆனால் தொடர்ந்து தேடுதலைச் சுட்டிக்காண்பிக்கும் நிகழ்கால வினைமுற்றாக உள்ளது. தேவனுடைய "இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும்" தேடுதல் என்பது, ஒருவரின் வாழ்வின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். இதன் விளைவானது. பவுலின் வார்த்தையில் சொல்வதென்றால், "நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமும்" என்பதாக இருக்கும் (ரோமர் 14:17). தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் முதலாவதாக நாடுதல் என்பது, உலகப்பொருள் ரீதியான அறிவற்ற கவலைகளை நீக்குகிறது தேவனுடைய பிள்ளைகள் இதைச் செய்தால், **இவைகளெல்லாம்** (வாழ்விற்கு அத்தியாவசியமானவை) நமக்குக் கிடைக்கும் என்று நமது கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தார் (காண்க பிலிப்பியர் 4:11-13).

**வசனம் 34.** இயேசு, **ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்** என்று கூறி இப்பகுதியை முடித்தார். சீஷர் என்பவர், நாளைய தினத்தைப் பற்றி அதிகம் கவலைகொண்டிருக்கக் கூடாது, ஆனால் அன்றைய நாளை நன்கு வாழவேண்டும். அவர் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சனைகளினால் மூழ்கடிக்கப்படுவதற்கு மாறாக நிகழ்காலத்தின்

*உண்மையான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும்.*

*எதிர்காலத்தைப் பற்றி கவலை கொள்ளுதல் என்பது, உண்மையில் நிகழ்காலத்தை சமாளிக்கக் கூடிய திறமையை ஒருவரிடத்தில் ஊனப்படுத்தி விடுகிறது, இது அவரது வாழ்நாள் காலத்தைக் குறுக்கக் கூடும். தள்ளுபடி ஆகமங்களில் ஒன்றான சீராக் ஆகமம், "கவலை, உரிய காலத்திற்கு முன்பே முதுமையை வருவிக்கும்" என்று கூறுகிறது.[15] மற்றும் மக்கள் கவலைப்படுபவற்றில் பல விஷயங்கள் ஒருக்காலும் நடப்பதில்லை; வாழ்வின் சூழ்நிலைகள் தொடர்ந்து மாறுகின்றன (நீதிமொழிகள் 27:1; யாக்கோபு 4:13-17). தல்மூத், "நாளைய தினத்தைப் பற்றிப் பதற்றம் கொள்ளாதீர்கள், ஏனென்றால் ஒருநாள் எதைக் கொண்டுவரும் என்பதை நீங்கள் அறிவதில்லை, மற்றும் ஒரு வேளை நாளையதினம் அவர் இல்லாமல் போகலாம், இவ்வாறு அவர் தம்முடையதல்லாததாகப் போகிற உலகத்தைப் பற்றிப் புலம்புபவராகக் காணப்படுவார்" என்று கூறுகிறது.[16] மேலும் அது, "ஒருமணி நேரத்திலேயே போதுமான அளவு தொந்தரவு உள்ளது" என்றும் உரைக்கிறது.[17]*

### ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## பொக்கிஷத்தைச் சேர்த்துவைத்தல் (6:19-24)

*இன்றைய நாட்களில் அமெரிக்கர்கள், செலவிடக் கொண்டுள்ள தங்கள் வருமானத்தில் அதிகமானவற்றை, நாளைய தினத்தில் (விரைவான எதிர்காலத்தில்) குப்பையாகப்போக இருக்கும் பொக்கிஷங்களில் செலவிடுகின்றனர். அடுத்த ஆண்டு கள விற்பனையில், சில புதையல் வேட்டைக்காக பேரம்பேசுவதாக இருக்க மாத்திரம் அந்தப் பொருளைக் கொண்டிருப்பதாக நாம் நினைக்கிறோம். ஞானமுள்ள ஒரு மனிதர், "அமெரிக்கர்கள், தாங்கள் விரும்பாத மக்களின் மனங்களை ஈர்ப்பதற்காக, தங்களுக்குத் தேவையற்ற பொருட்களை வாங்குவதற்கு, தாங்கள் கொண்டிராத பணத்தைச் செலவிடுகின்றனர்" என்று எழுதினார்.*

*மக்களில் பலர், தாங்கள் ஏற்கனவே கொண்டுள்ள பொருள் செல்வங்களை மகிழ்வுடன் அனுபவிக்காத அளவுக்கு, பொருள்களை நாடித்தேடுதலினால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளனர். பொருள் உடைமைகளினால் அலைக்கழிக்கப்படுதல் என்பது, "பெரும்பாலான பொம்மைகளுடன் இறப்பவர் வெற்றிபெறுகிறார்" என்ற வரிகளைக் கொண்டுள்ள பம்ப்பர் ஸ்டிக்கரினால் பிடித்துக் காட்டப்படுகிறது. இருப்பினும் நாம் யாவருமே, "நீங்கள் செல்லும்போது எதையும் கொண்டு செல்ல இயலாது" என்பதை அறிந்துள்ளோம். பவுல், "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும்கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:7). எகிப்திய பார்வோன்களில் சிலர், மரணத்திற்குப் பிந்திய வாழ்வில் மகிழ்வுடன் அனுபவிக்கலாம் என்று கருதப்பட்டு, பெரிய பிரமிடுகளில் தங்கள் செல்வங்களுடன் அடக்கம்பண்ணப்பட்டனர். ஆனால் அவ்வாறு அனுபவிப்பதற்குப் பதிலாக அந்தச் செல்வங்கள், அடுத்தடுத்து வந்த தலைமுறைகளில், கொள்ளைக்காரர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அருங்காட்சியங்களின் உடைமைகள் ஆயின.*

உலக உடைமைகளைச் சேர்த்துக் குவிப்பதன் மீதல்ல, ஆனால் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பிறருக்கு உதவுதல் ஆகியவற்றின்மீதே நமது கவனக்குறிப்பு இருக்க வேண்டும். தேவனிடத்தில் இருந்து நமக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை, இந்த நோக்கங்களுக்காக நாம் பயன்படுத்துவதினால், பரலோகத்தில் பொக்கிஷங்களை நாம் சேர்த்து வைக்க முடியும். நமது பொக்கிஷங்கள் பூமியில் இருந்தால், பரலோகத்திற்கு நம்மை நாம் ஆயத்தப்படுத்த மாட்டோம்: "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (6:21). பின்பு நாம், பரலோகத்தில் காணப்படும் நித்திய சந்தோஷத்தை இழந்து போவோம். நமது கணக்கில் "போதுமான நிதி இல்லை" அல்லது "கணக்கும் முடிக்கப்பட்டுவிட்டது" என்று நியாயத்தீர்ப்பு நாளில் காணுதல் எவ்வளவு கவலைக்குரியதாக இருக்கும்!

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது பற்றுறுதி கிறிஸ்துவினிடம் இருக்க வேண்டும். அவருக்கும் செல்வத்திற்கும் ஒரேவேளையில் நம்மால் ஊழியம் செய்ய முடியாது. ஒருமுறை ஒரு நபர், தமது பொருள் உடைமைகளுக்கு அடிமையானார், அவர் தமது வாழ்வில் இருந்து கிறிஸ்துவை வெளியேற்றினார். பொருளாதாய விஷயங்களால் நிறைந்துள்ள இருதயத்தில் கிறிஸ்து வாழ இயலாது. ஒரு தெரிவு மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். நாம் தேவனுடன் நித்தியத்திற்கும் இருக்க விரும்பினால், பாவம் மற்றும் நமது உடைமைகள் ஆகியவற்றிற்கு மேலாக, அவருக்கு ஊழியம் செய்வதையும் அவருடைய நீதியையும் நாம் தேர்ந்துகொள்ளவேண்டும் (காண்க ரோமர் 6:16-18).

## சர்வ வல்லமையுள்ள தேவன் (6:24)

அமெரிக்க ஐக்கிய நாட்டை தோற்றுவித்த பிதாக்கள், ஒரு மக்களினம் என்ற வகையில் நமது வெற்றியானது தேவனிடத்தில் இருந்து வருகிற ஆசீர்வாதமாக இருந்தது என்று நம்பினர். அவர்கள், "தேவனில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்ற வார்த்தைகளை தமது நாணயங்களில் மற்றும் ரூபாய் நோட்டுகளில் அச்சிடும் பாரம்பரியத்தைத் தொடங்கினர், ஏனென்றால் அவரது அருளிரக்கமே நமது சுதந்தரங்களுக்குப் பொறுப்பானதாக இருந்தது மற்றும் அது எதிர்கால வெற்றியையும் உறுதிப்படுத்துகிறது என்று அவர்கள் நம்பினர். "சர்வ வல்ல டாலர்" மீதல்ல, ஆனால் அதற்கு மாறாக, சர்வ வல்லமையுள்ள தேவன்மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். டாலர் நோட்டின் பின் பக்கத்தில், பாலைவனத்தில் இருந்து எழும் பிரமிடு (நமது வெற்றியின் அடையாளம்), எல்லாவற்றையும் காணும் கண்ணினால் (தேவனுடைய அருளிரக்கத்தின் அடையாளம்) முடிசூட்டப் பட்டுள்ளது. அதற்கு மேல் காணப்படும் *Annuit Coeptus* என்ற இலத்தீன் சொற்றொடர், "நமது பொறுப்புகளுக்கு அவர் ஆதரவு தருகிறார்" அல்லது "தேவன் நம்மைக்கண்டு புன்னகை செய்கிறார்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.

டேவிட் ஸ்டீவர்ட்

## கவலை (6:25-34)

"Worry" என்ற ஆங்கில வார்த்தை "நெறித்தல்" என்று அர்த்தப்படும்

*பழைய ஜெர்மானிய வார்த்தையில் இருந்து வருகிறது. கவலை என்பது அதையே செய்கிறது: அது வாழ்வில் இருந்து சந்தோஷங்களை நெறித்து நம்மை அதிக சிக்கல்கள் கொண்டவர்களாக விடுகிறது. மக்களில் பலர் தங்கள் கவலையின் காரணமாக, தங்கள் விரல் நகங்களைக் கடிக்கின்றனர், அங்குமிங்குமாக நடக்கின்றனர் அல்லது தங்கள் சிந்தனைகளுடன் போராடிக்கொண்டு இரவெல்லாம் கண் விழிக்கின்றனர். சிலர், சிகரெட்டுகள், மதுபானம் மற்றும் போதை மருந்து உட்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு அடிமையாகின்றனர். கவலை என்பது பரிபூரண வாழ்வை நாம் வாழுதலை நம்மிடம் இருந்து நிச்சயமாகவே திருடி விடுகிறது.*

*இளம்பிராயத்தினரும் இளம் முதிர் வயதினரும் தங்கள் நண்பர்கள், நேசித்தல் உறவுமுறைகள், படிப்புகள் மற்றும் எதிர்காலம் உள்ளடங்கப் பல விஷயங்களைப் பற்றி அடிக்கடி கவலைப்படுகின்றனர். சிலர் தங்கள் உடைகளைப் பற்றிக் கவலைப்படுகின்றனர்; அவர்கள் நவீன உடைகளையும் மிகச்சிறந்த தயாரிப்புகளையும் உடுத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். வயது முதிர்ந்தவர்கள், இளையோராகக் காணப்படுதல் மற்றும் நீண்ட நாட்கள் வாழுதல் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படுகின்றனர். "வாலிபமாக" நிலைத்திருத்தலுக்கான சில முயற்சிகள், வாழ்வின் மிகச்சிறந்த தரத்தை அளிக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிக் கவலைப்படுதல் என்பது நமது வாழ்நாளை உண்மையில் குறுக்கி விடுகிறது. கவலைப்படுதல் என்பது தீவிரமான உடல்நலப் பிரச்சனைகளுக்குப் பங்களிப்பதாக உள்ளது என்பதைப் பல ஆராய்ச்சிப் படிப்புகள் சுட்டிக்காண்பித்துள்ளன. மருத்துவர் சார்லஸ் H. மேயோ அவர்கள், தமது சகோதரருடன் இணைந்து மேயோ மருத்துவமனையைத் தோற்றுவித்தார், இவர் "கவலை என்பது இரத்த ஓட்டத்தைப் பாதிக்கிறது, இருதயத்தையும் சுரப்பிகளையும் நரம்பு மண்டலம் முழுவதையுமே அது பாதிக்கிறது. அதிக வேலையினால் இறந்த மனிதர் யாரையும் நான் அறிந்ததில்லை, ஆனால் பலர் சந்தேகத்தினால் இறக்கின்றனர்" என்று எழுதினார்.*[18]

---

*குறிப்புகள்*

[1]Tobit 4:9, 10; *4 Ezra* 6.5; *Testament of Levi* 13.5; *Psalms of Solomon* 9.5; Mishnah *Peah* 1.1. [2]Sirach 29:10, 11 (NRSV). [3]Talmud *Baba Bathra* 11a. [4]J. C. Ryle, *Ryle's Expository Thoughts on the Gospels: Matthew-Mark* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, n.d.), 56. [5]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 138-39. [6]*காண்க* Sirach 14:9. [7]*Testament of Joseph* 14.2; Mishnah *Pesahim* 8.1. [8]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 107. [9]Ibid. [10]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 349, n. 334.

[11]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 48. [12]Ibid., 49. [13]Talmud *Sotah* 48b. [14]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 61. [15]Sirach 30:24 (NRSV). [16]Tal-

mud *Sanhedrin* 100b. [17]Talmud *Berakoth* 9b. [18]Quoted in *Worries: Webster's Quotations, Facts and Phrases* (San Diego: Icon Group International, 2008), 8.